1970 மார்ச் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) "யுனிசெப்" முகவர் நிறுவனத்தின் மூலம் பால் பவுடர் எதுவும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறைக்கு கிடைக்கப்பெறுவதில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: கேர் நிறுவனத்திலிருந்து இந்த அரசுக்கு அதிக அளவிலே பால் பவுடர் கிடைத்துவருகிறது. இந்தப் பவுடர் சரியான முறையிலே விநியோகிக்கப்படாமல், மளிகைக் கடைகளிலும், ஹோட்டல்களிலும் விற்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இனியாகிலும் இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேர் நிறுவனத்திலிருந்து வரும் பால் மாதவரம் பால் பண்ணைக்கு வருவதில்லை. கல்வித் துறை அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி இது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the quantity of deficit of milk in our State and the alternative schemes proposed by this Government to make up the deficit

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பால் குறைவாக இருக்கிற காரணத்தினால், பாலை அதிகமாக அளிக்கவேண்டும் என்பதற்காக அரசாங்கத்திற்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற பால் பவுடர் வருகிறது. சிங்கிள் டோன்டு, டபிள் டோன்டு என்று பாலாக மாற்றி, அது சென்னையிலும் மற்ற இடங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

Madhavaram Milk Project

* 180 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether it is a fact that the residents of Madras City have not been supplied with Buffalo milk from July 1969 by the Madras Milk Project at Madhavaram; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வெளியூர்களிலிருந்து வரும் பாலின் அளவு படிப்படியாகக் குறைந்ததால், 1969 ஜூன் 16 முதல் எருமைப்பால் ஒரு வேளைக்கு மட்டும் வழங்கப்பட்டது. மற்றொரு வேளையில் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப்பட்டது. ஜூலைத்திங்கள் முதல் எருமைப்பால் வழங்குவது அறவே நிறுத்தப்பட்டு காலை, மாலை, ஆகிய இருவேளைகளிலும் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப்பட்டது. 15—8—69 வரை பசும்பால் முறையாக வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் பசும்பாலுக்குப் பதிலாக தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப்பட்டது. 16—10—69 முதல் பசும்பால் மீண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 16—10—69 முதல்

[1970 மார்ச் 3

மாலைவேளைகளில் மீண்டும் எருமைப்பால் வழங்குவது மேற்கொள்ளப்பட்டது. காலை வேளையிலேயே எருமைப்பால் அதிகமாகத் தேவைப்படுவதால் நவம்பர் 16 முதல் காலைவேளையில் எருமைப் பாலும் மாலைவேளையில் தரம் உயர்த்தப்பட்ட பாலும் வழங்கப் பட்டு வருகிறது.

*** 181 வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் 1968-69-ம் ஆண்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து உயர்ந் தரகப் பசுக்கள், எருமைகள் வாங்கப்பட்டனவா ?

(இ) அதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 82,008.20.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, எருமைப் பால் சென்னை நகருக்கு போதுமான அளவில், தேவைக்குத்தக்கபடி சப்ளை செய்ய முடியாததால், மக்கள் பால் கிடைக்காமல் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, இந்தக் குறையை நீக்க, உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பால் குளிர் காலங்களில் அதிகமாகக் கிடைக்கும்; கோடைக்காலங்களில் குறைவாகத்தான் கறக்கும். குளிர் காலங்களில் எருமைப்பால் கொடுக்கிறோம். ஆனால் கோடை காலங்களில் போதிய அளவு கிடைக்காததால், பசும்பாலையும், சில வேளைகளில் அதுவும் அதிகமாகக் கிடைக்கா விட்டால், சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று பாலை தரப் படுத்தி. பவுடரைக் கலந்து வினியோகம் செய்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சரவர்கள் 82,000 ரூபாய் செல வில் வாங்கப்பட்டதாகக் கூறினார்கள். எத்தனை மாடுகள் வாங்கப் பட்டன ? பால் பண்ணையில் 2,000 மாடுகள் இருந்து, பால் கறந்து கொடுத்தவர்களுக்கு சரியான விலை கொடுக்காததால் பால் பண்ணை யிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்று கூறப்படுவது உண் மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்தம் வெளி நாட்டி லிருந்து வாங்கப்பட்ட பசுக்கள் 16, காளைகள் 5. அங்கே இருந்தவர் கள் சரியான விலை கொடுக்காததால் வெளியேறிவிட்டார்கள் என் பதை ஒத்துக்கொள்ள முடியாது. அங்கே மாடுகளை வைத்துக் கொண்டு, பால் பண்ணைக்கு மாட்டுக்கு ஒரு லிட்டர், இரண்டு லிட் டர் வீதம் கொடுத்துவிட்டு, மீதம் உள்ள பாலை வெளியிலே விற்க ஆரம்பித்தார்கள். எவ்வளவு பால் கறக்கிறார்களோ அவ்வளவு பாலையும் பண்ணைக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உத்தரவைப் போட்ட பிறகு அவர்களாகவே வெளியேறிவிட்டார்கள்.